30 MAY 2008
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2005/2006 (வெளிவாரி)
## (பெப்ரவரி/மார்ச் 2008)

## PS 201 இலங்கையின் அரசியற் திட்ட வளர்ச்சியும் சுதந்திரத்திற்குப் பிந்திய அரசாங்கங்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01. இலங்கையின் சுதந்திரத்திற்காக இலங்கைத் தேசிய காங்கிரஸ் வகித்த பங்கினை மதிப்பீடு செய்க.

02. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் நிர்வாகக் குழுமுறையை இலங்கையில் நடைமுறைப்படுத்தியதற்கான காரணங்களையும் அதன் தன்மையினையும் விளக்குக.

03. சோல்பரி அரசியல் திட்டத்தின்கீழ் பின்வருவன பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(அ) சட்டசபை
(ஆ) சிறுபான்மையோர் காப்பீடு

04. (அ) 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு வரையப்பட்ட பின்னணியினை விளக்குக.
(ஆ) "இந்த யாப்பானது முன்னைய யாப்புக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது". இக்கூற்றை ஏற்றுக் கொள்கின்றீரா? உமது விடைக்கு காரணங்கள் தருக.

05. 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் நடை முறைப்படுத்திய ஜனாதிபதித்துவ ஆட்சி முறையின் நன்மை தீமைகளை மதிப்பீடு செய்க.

06. மாகாணசபை ஆட்சி முறையின் கீழ் ஆளுனரின் அதிகாரங்களை விளக்குக.

07. இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காமைக்கான காரணங்களை விளக்குக.

08. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) தற்போதைய ஜனாதிபதியின் ஆளுமை அரசியல்
(ஆ) விகிதாசாரப் பிரதிநித்துவம்
(இ) வெளிநாட்டுக் கொள்கை
(ஈ) அரசியலமைப்பு நீதிமன்றம்

*********